ශියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## வரலாறு - ඉතිහාසය

தரம் : **7** நேரம்: 2 மணித்தியாலம்

பெயர் /சுட்டெண்:

**பகுதி** I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

♦ 1 தொடக்கம் 5 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையை கீழுள்ள அட்டவணையிலிருந்து தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.

1. தீயிட்டு புதிதாக உருவாக்கிக்கொள்ளப்பட்ட நிலமானது .................................... எனக் குறிப்பிடப்படும்.
2. கிராமக் குளங்களை அமைத்தவர்கள் புராதன கல்வெட்டுக்களில் ......................................... எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.
3. தனி அமைப்புக்களை உருவாக்கிக் கொண்டு வர்த்தகத்தில் சம்பந்தப்பட்டவர்கள் ................................................ என குறிப்பிடப்பட்டனர்.
4. பொலன்னறுவை யுகத்தின் முதலாவது ஆட்சியாளன் ........................................... ஆவான்.
5. பாலைப் பெற்றுக்கொள்வதற்காக வளர்க்கப்பட்ட பசுக்கள் .......................................... என அழைக்கப்படும்.

(வபி ஹமிக, ஹெலிகடா, புக, கிரிகெரி, நவதெனி சேனை, பராக்கிரமபாகு, 1ம் விஜயபாகு, பல்லவர், களம்)

♦ 6 - 10 வரையிலான ஒவ்வொரு கூற்றுக்களிலும் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடைப்பினுள் இடுக.

6. ஆரம்ப காலத்தில் சேனைகளில் பயிரிடப்பட்ட நெல் கரைநெல் ஆகும். ( )
7. சமையல் கலையில் சிறப்புப் பெற்ற பெண்கள் மதுபாச்சிகா என அழைக்கப்பட்டனர் ( )
8. புதிதாக உருவாக்கப்படும் சேனையானது பிட்டபிம் என கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ( )
9. தென் இந்தியாவின் பல்லவ இராச்சியத்தின் தலைநகரம் தஞ்சாவூர் ஆகும். ( )
10. குதிரைகள் குறித்த விடயங்களுக்கான பிரதானி அதி அதிக ஆவான். ( )

♦ 11 - 15 வரையான வினாக்களுக்கு சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.



11. இப்படத்தின் மூலம் காட்டப்படும் பாரம்பரிய கலை எது?
   1) முகமூடிகளும் பொம்மலாட்டக் கலைகளும்
   2) அரக்கு சித்திரக் கலை
   3) பன் புல்லால் தயாரிக்கப்பட்ட பொருட்கள்
   4) பித்தளை செதுக்கற் கலை

12. மோரிய வம்சத்தை சேர்ந்த மன்னன் யார்?
   1) வசப மன்னன் 2) மானவர்ம மன்னன் 3) தாதுசேனன் 4) துட்டகைமுனு

13. யுனெஸ்கோ அமைப்பினால் உலக மரபுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்ட இடம் எது?
   1) வட கோட்டை 2) கொழும்பு கோட்டை
   3) புறக்கோட்டை 4) காலி கோட்டை

14. இலங்கையுடன் மிக வெற்றிகரமான வர்த்தக உறவுமுறைகளைக் கொண்டிருந்த நாடொன்றானது,
   1) அரேபியா 2) அமெரிக்கா 3) மாலைத் தீவு 4) மலேசியா

15. தொட்டுணர முடியாத மரபுரிமை ஒன்றானது
   1) மரச் செதுக்கல் 2) குளங்கள் 3) நாட்டார் பாடல்கள் 4) வாவிகள்

♦ 16 - 20 வரை உள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

16. புராதன மூலாதாரங்களில் மாட்டை வளர்ந்தவர்கள் வாழ்ந்ததாகக் கூறப்படும் கிராமத்தின் பெயர் என்ன? ............................................................
17. அக்கால மனிதர்கள் மாடுகளின் முதுகில் பொருட்களை கொண்டு செல்ல பயன்படுத்திய முறை என்ன? ............................................................



18. தோணிகல கல்வெட்டில் பெரும்போகம் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது? ................................................
19. துறைமுகங்களில் கடமை புரிந்த அதிகாரிகள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?.............................................
20. படத்தில் காட்டப்படுவது புராதன கால வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கான சான்று ஒன்றாகும். அதனைப் பெயரிடுக. ...................................................................

(20 X 2 = 40புள்ளிகள்)

**பகுதி** II

♦ முதலாம் வினா கட்டாயமானது
♦ முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.




1. கீழே தரப்பட்டுள்ள இந்திய உருவப்படத்தை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க.

அ) i) நிஸ்ஸங்க மல்ல மன்னனின் பிறப்பிடம் எந்த ஆங்கில எழுத்தினால் குறிப்பிட்டப்பட்டுள்ளது? (2 புள்ளி)

ii) தென் இந்தியாவில் முதல் முதலாக பாரிய பேரரசு ஒன்றை கட்டியெழுப்பிய நாட்டை குறிக்கும் ஆங்கில எழுத்து எது? (2 புள்ளி)

iii) மதுரையை தலைநகரமாகக் கொண்ட அரசை குறிக்கும் எழுத்து யாது? (2 புள்ளி)

ஆ) பொலன்னறுவை ஆட்சிக்கால அரசர்களை அடிப்படையாகக் கொண்ட அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது. அதனைப் பூரணப்படுத்துக. (6 புள்ளி)

| மன்னன் | குறிப்பிடப்படும் தகவல்கள் | மூலாதாரங்கள் |
|---|---|---|
| 1ம் விஜயபாகு | பிள்ளைப் பருவம் | i) ........................................ |
| ii)................................... | பர்மாவை ஆக்கிரமித்து வெற்றி கொண்டமைக்காக நகரிகிரி கீர்த்திக்கு கிராமங்களை வழங்கியமை | தெவனகலக் கல்வெட்டு |
| 1ம் விஜயபாகு | iii) ........................................ | அம்பகமுவ கல்வெட்டு |



இ) i) இப்படத்தினால் காட்டப்படும் உலக மரபுரிமை யாது? (2 புள்ளி)

ii) இது உலகப் பண்பாட்டு பாரம்பரியமாக்கப்பட்டது எதனை நோக்கமாகக் கொண்டாகும்? (2 புள்ளி)

2. i) அக்கால சமூகம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய மூலாதாரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுக்குப் பொருத்தமான தகவல்களை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.

A. வேவெல்கெட்டிய கட்டெட்டு

B. அந்தானி தூண் .................................................................... (2 புள்ளி)

(குற்ற வழக்குகளை தீர்த்தல், பண முகாமைத்துவம், விஷேட அதிகாரங்களும் வரப்பிரசாதங்களும், விகாரைகளின் வரவு செலவு)

ii) 1ம் பராக்கிரமபாகு மன்னன் தெதுரு ஓயாவின் நீரை விவசாயத்திற்கு பயன்படுத்தும் பொருட்டு மூன்று இடங்களில் அணைக்கட்டி திருப்பினான். அம்மூன்று இடங்களையும் குறிப்பிடுக. (3 புள்ளி)

iii) புராதனகால மன்னர்கள் சமூக நலன்புரி நடவடிக்கைகளில் விசேட கவனம் செலுத்தினர். அவர்கள் கவனம் செலுத்திய நலன்புரி நடவடிக்கைகளைக் கொண்டு பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| மன்னர்கள் | மேற்கொண்ட நலன்புரி நடவடிக்கை |
|---|---|
| i) ................................................ | பத்துக்கிராமங்களுக்கு ஒரு வைத்தியர் நியமித்தல் |
| முதலாம் உப திஸ்ஸ மன்னன் | ii)..................................................... |
| iii)......................................... | தொற்று நோயாளிகளைப் பராமரிக்க வைத்தியசாலை கட்டுதல் |

(6 புள்ளி)

3. i) A. இவ்வுருவின் மூலம் காட்டப்பட்டிருப்பது யாது? (1 புள்ளி)



B. இது எங்கு அமைந்துள்ளது? (1 புள்ளி)

ii) நிஸங்கமல்ல மன்னனின் கல்வெட்டுக்கள் 3 குறிப்பிடுக. (3 புள்ளி)

iii) நீர் ஒரு பாடசாலை மாணவர் என்ற வகையில் 1ம் விஜயபாகு மன்னனிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றை உமது வாழ்க்கையோடு தொடர்புபடுத்தும் விதத்தையும் விளக்குக. (6 புள்ளி)

4. i) A. இவ்வுருவில் காட்டப்பட்டிருப்பது எக்கலை நுட்பத்தைச் சேர்ந்த நிர்மாணமாகும்?



B. இம்முக மூடிகளைத் தயாரிக்கப் பயன்படுத்தும் உருவங்கள் யாவை?

ii) இலங்கையின் உலக கலாசார மரபுரிமைகளாக யுனெஸ்கோ நிறுவனம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இடங்கள் 3 குறிப்பிடுக. (3 புள்ளி)

iii) பின்வரும் கலாசார உரிமைகளை தொட்டுணரக்கூடிய, தொட்டுணரமுடியாத மரபுரிமைகள் என தெரிந்தெடுத்து அட்டவணையைப் பூர்த்தி செய்க.

- பெற்றாரை வணங்குதல்
- குட்டம் பொய்கை
- நடனம் ஆடுதல்
- ருவன்வெலிசாயா
- ஏடு தொடங்குதல்
- தாளத்துடன் பாடுதல்
- சீகிரியா

| தொட்டுணரக்கூடியது | தொட்டுணர முடியாதது |
|---|---|
| | |

5. i) தரப்பட்டுள்ள இடங்களிலிருந்து இலங்கையில் உலக மரபுரிமைகளாக பண்டைய பொலன்னறுவை நகரத்தினுள் அமைத்திருக்கும் சமயம் சார்ந்த இடங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. *(2 புள்ளி)*

- ரன்மசு பூங்கா
- திவங்க சிலைமணை
- கடபத் விகாரை
- அபயகிரி
- ரன்கொத் விகாரை
- ஆயிரம் கால் மண்டபம்

ii) அ) இவ்வுருவின் மூலம் காட்டப்பட்டிருக்கும் உலக மரபுரிமை யாது? *(1 புள்ளி)*

ஆ) இதனை நிர்மாணிக்கப் பயன்படுத்திய இயற்கை அமைப்பு யாது? *(1 புள்ளி)*



iii) புராதனகால மன்னர்கள் பல்வேறு விழாக்களில் தொட்டுணர முடியாத அரங்கக்கலைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டமைக்கான உதாரணங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. *(6 புள்ளி)*

6. i) சீகிரியா வியக்கத்தக்க நிர்மாணம் என்பதனை எடுத்துக்காட்டக்கூடிய சிறப்பம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. *(2 புள்ளி)*

ii) சீகிரியாவின் நீர்த்தொழிநுட்பம் பற்றி விளக்குக. *(3 புள்ளி)*

iii) பின்வரும் குறுக்கெழுத்துப் புதிரை பூரணப்படுத்துக.

**இடமிருந்து வலம்**

1) உலக கலாசார மரபுரிமைகளில் ஒன்று
4) பராக்கிரமபாகு மன்னன் பர்மாவை ஆக்கிரமிக்க அனுப்பிய படைக்கு தலைமைதாங்கிய சேனாதிபதி

**மேலிருந்து கீழ்**

1) தொட்டுணர முடியாத மரபுரிமைகளில் ஒன்று
2) ரஜமகாவிகாரை இப்பிரதேசத்தில் அமைந்துள்ளது
3) அநுராதபுரகாலத்தில் கிராமத்தை நிர்வகித்தவர்
5) அதிகாவ எனும் ஒழுக்கக் கோவை இவ்வகாரை கற்றூணில் எழுதப்பட்டுள்ளது.




7. i) இலங்கையில் முகமூடிக்கைத்தொழிலுக்கு பிரசித்தமான இடங்கள் 2 தருக. *(2 புள்ளி)*

ii) இராசரட்டை நாகரிகயுகத்தில் பரம்பரை மரபுரிமையாக இடம்பெற்றுவந்த பொது வைபவங்கள் 3 குறிப்பிடுக. *(3 புள்ளி)*

iii) இலங்கையின் உலக கலாசார மரபுரிமைகளாக யுனெஸ்கோ நிறுவனம் பின்வரும் ஆறு இடங்களை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. பின்வரும் இலங்கைப் படத்தில் தரப்பட்டுள்ள இடங்களின் இலக்கங்களை உரிய இடத்தில் இட்டு பூரணப்படுத்துக.

1) பழைய அநுராதபுர நகரம்
2) பழையபொலன்னறுவ நகரம்
3) சீகிரியா
4) ரன்கிரி தம்புள்ள குகை விகாரை
5) கண்டி தளதா மாளிகை
6) காலி கோட்டை

*(6 புள்ளி)*



This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.